# மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி

## கடலூர் மாவட்டம்

**ந.க.எண். 187/2022/அ1** **நாள் : 01.07.2022**

## குறுகியகால ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

கடலூர் மாவட்டம், மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சியில் **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–2023–**ன் கீழ் அட்டவணையில் கண்டுள்ள பணியினை செய்வதற்கு இரட்டை உறை (Two Cover System) முறையில் ஒப்பந்தப்புள்ளிகள் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலர் அல்லது அவரது அதிகாரம் பெற்றவரால் **19.07.2022–ம் தேதி செவ்வாய்க்கிழமை** பிற்பகல் 3.00 மணி வரை பேரூராட்சி அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்படும்.

### அட்டவணை

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) | டேவணித் தொகை ரூ. | ஒப்பந்தப் புள்ளி நமுனா ரூ. | வேலை முடிக்க வேண்டிய காலம் |
|---|---|---|---|---|---|
| **கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–2023** | | | | | |
| 1. | வரட்டுக்குட்டை புனரமைப்பு பணிகள் மேற்கொள்ளுதல். | 78.00 | 78000/– | 16875/– | 180 நாட்கள் |

1. மேற்படி ஒப்பந்தப்புள்ளி போடுவதற்கான ஒப்பந்தப்புள்ளி படிவத்தை **18.07.2022–ம் தேதி திங்கள் கிழமை** பிற்பகல் 4.00 மணிக்குள் பேரூராட்சி அலுவலகத்தில் ஷெட்யூல் படிவக் கட்டணம் (விற்பனை வரி உட்பட) செலுத்தி படிவம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
2. ஒப்பந்தப்புள்ளிகள் மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி செயல் அலுவலரால், பேரூராட்சி அலுவலத்தில் **19.07.2022-ம்** தேதி பிற்பகல் 3.30 மணிக்கு வந்திருக்கும் ஒப்பந்ததாரர்கள் முன்னிலையில் திறக்கப்படும்.
3. ஒப்பந்தப்புள்ளிகள் மூடி முத்திரையிடப்பட்ட உறையின் மேல் எந்த வேலை என்ற விபரத்தை தெளிவாக எழுதப்பட்டிருக்க வேண்டும்.
4. ஒவ்வொரு ஒப்பந்ததாரரும் அட்டவணையில் குறிப்பிட்ட வேலைக்கு எதிரே குறிக்கப்பட்டுள்ள தொகையை டேவணித் தொகையாக பேரூராட்சி அலுவலகத்தில் செலுத்தி இரசீதை ஒப்பந்தப்புள்ளியுடன் இணைத்து அனுப்ப வேண்டும். ஒப்பந்ததாரர்களுடைய டேவணித் தொகை வேலைகளுக்கான பிணை வைப்புத் தொகையாக வைத்துக் கொள்ளப்படும். இத்தொகைக்கு பேரூராட்சியில் வட்டி எதுவும் கொடுக்கப்படமாட்டாது.
5. மதிப்பீட்டுத் தொகைக்கு கூடுதலாக வேலையை செய்வதாக குறிப்பிடும் ஒப்பந்தப்புள்ளிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.
6. மதிப்பீட்டுத் தொகைக்கு குறைவாக வேலையை செய்வதாக ஒப்புக்கொள்கிறவர்கள் 10% வரை பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்படும். 10% மேற்கொண்டு குறைவாக கோரும் பட்சம் கூடுதல் பிணை வைப்புத் தொகையாக 10% செலுத்தினால் தான் அவர்களுடைய ஒப்பந்தப்புள்ளிகள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும். இதற்கு பேரூராட்சியில் வட்டி ஏதும் வழங்கப்பட மாட்டாது.
7. ஒரு வேலைக்கு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டும் வந்தால் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
8. டேவணித் தொகை செலுத்தப்படாத ஒப்பந்தப்புள்ளிகளும், உரிய படிவத்தில் போடாத ஒப்பந்தப்புள்ளிகளும், குறித்த நேரத்திற்கு பிறகு பெறப்படும் ஒப்பந்தப்புள்ளிகளும் நிராகரிக்கப்படும்.
9. அரசு ஒப்பந்தப்புள்ளி விதிகளுக்குட்பட்டு ஒப்பந்தப்புள்ளிகள் முடிவு செய்யப்படும் குறைந்த விகித ஒப்பந்தப்புள்ளியைத் தான் ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று பேரூராட்சியை கட்டுப்படுத்த இயலாது. காரணங்கள் கூறாமல் ஒரு ஒப்பந்தப்புள்ளி அல்லது பெறப்பட்ட அனைத்து ஒப்பந்தப்புள்ளிகளையும் நிராகரிக்கும் அதிகாரம் பேரூராட்சிக்கு உண்டு.
10. ஒப்பந்தப்புள்ளி ஏற்றுக்கொள்ளப்பட்டதற்கான அறிவிப்பு கிடைத்த தேதியில் இருந்து 7 நாட்களுக்குள் ஒப்பந்ததாரர் வேலைகளை முறையாக முடித்து தருவதாக ரூ.20/-க்கான முத்திரை தாளில் ஒப்பந்தப்பத்திரம் எழுதிக் கொடுக்க வேண்டும்.
11. ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒப்பந்ததாரர்கள் செலுத்திய டேவணித்தொகை வேலைக்கான பட்டியல் மற்றும் கணக்குகளின் தணிக்கை முடிந்தவுடன் திருப்பி அளிக்கப்படும். தணிக்கையில் ஆட்சேபிக்கப்பட்டுள்ள தொகையினை ஒப்பந்ததாரர் பேரூராட்சிக்கு செலுத்த வேண்டும்.

த.பி.பா......1

12. ஒப்பந்ததாரர் மனுவில் வேலைகள் மற்றும் சதவீதத்தினை தெளிவாக எழுதியிருக்க வேண்டும். அடித்தல், திருத்தல் இருக்கக் கூடாது. அவ்வாறிருப்பின் அடிக்கப்பட்ட இடங்களில் ஒப்பந்ததாரர் கையொப்பம் இட்டிருக்க வேண்டும். ஒப்பந்தப்புள்ளியில் குறிப்பிட்டுள்ள இலக்கங்கள் எண்ணாலும், எழுத்தாலும் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
13. ஒப்பந்ததாரர் ஒப்புக்கொள்ளப்பட்ட வேலைக்கு சப்ளை செய்யப்படும் பொருட்கள் தரமானதாக இருக்க வேண்டும். தரமானதாக இல்லை என்று நிராகரிக்கப்பட்டால் அவ்வாறு நிராகரிக்கப்பட்ட பொருட்களை ஒப்பந்ததாரர் தனது சொந்த பொறுப்பில் அகற்றிக் கொள்ள வேண்டும்.
14. பணி நடைபெற்றுகொண்டிருக்கும் பொழுது ஏதேனும் விபத்துக்கள் ஏற்பட்டால் ஒப்பந்ததாரரே அதற்கு முழு பொறுப்பாவார்.
15. செய்து முடிக்கப்பட்ட வேலைகள் வேலை முடிவுற்று 6 மாத காலத்திற்குள் அதில் ஏதேனும் பழுதுகள் ஏற்பட்டால் அதனை ஒப்பந்ததாரர் தனது சொந்தப்பொறுப்பில் சரி செய்து கொடுக்க வேண்டும். தவறினால் ஒப்பந்ததாரர் செலுத்தியுள்ள பிணை வைப்புத் தொகையிலிருந்து பேரூராட்சியால் பழுது பார்க்கப்படும்.
16. ஒப்பந்தப்பத்திரம் எழுதி முடித்த தேதியிலிருந்து மூன்று தினங்களுக்குள் வேலையை துவக்கி குறிப்பிட்ட கால அளவிற்குள் வேலையை முடிக்க வேண்டும்.
17. செய்து முடிக்கப்பட்ட வேலைகளுக்கு வருமானவரி, விற்பனைவரி பிடித்தம் கண்டிப்பாக செய்யப்படும்.
18. மதிப்பீட்டு தொகையில் 1% கட்டிட தொழிலாளர் நலநிதிக்காக வங்கி கேட்பு வரைவோலையினை பேரூராட்சியில் வழங்கிய பிறகே பணிக்கான ஆணை வழங்கப்படும்.
19. ஏற்கனவே பேரூராட்சியில் ஒப்பந்த அடிப்படையில் வேலைகள் எடுத்து குறிப்பிட்ட காலத்தில் பணிமுடிக்காத ஒப்பந்ததாரர்களுக்கு வேலைக்கான ஷெட்யூல் வழங்கப்படமாட்டாது.

**செயல் அலுவலர்,**
**மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி,**
**கடலூர் மாவட்டம்.**

**<u>பெறுதல்</u>**

1. பதிவு பெற்ற ஒப்பந்ததாரர்கள், மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி.

**<u>நகல்:</u>**

1. கடலூர் மாவட்ட மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
2. கடலூர் மண்டல பேரூராட்சிகள் உதவி இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
3. சட்டமன்ற உறுப்பினர், பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி அவர்களுக்கு தகவலுக்காக பணிந்தனுப்பப்படுகிறது.
4. தலைவர், துணைத்தலைவர் மற்றும் வார்டு உறுப்பினர்கள், மேல்பட்டாம்பாக்கம் பேரூராட்சி மன்றம் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
4. உதவி செயற்பொறியாளர் (பேரூராட்சிப் பணிகள்) கடலூர் அவர்களுக்கு தகவலுக்காக அனுப்பப்படுகிறது.
5. செயல் அலுவலர், பேரூராட்சி அலுவலகம், கெங்கைகொண்டான் / மங்கலம்பேட்டை / பெண்ணாடம் / தொரப்பாடி / குறிஞ்சிப்பாடி / கிள்ளை / பரங்கிப்பேட்டை /ஸ்ரீமுஷ்ணம் விளம்பரம் பலகையில் பிரசுரிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.
6. இளநிலைப் பொறியாளர், பேரூராட்சி அலுவலகம், கெங்கைகொண்டான் தகவலுக்கு.
7. கிராம நிர்வாக அலுவலர், மேல்பட்டாம்பாக்கம் விளம்பரப் பலகையில் பிரசுரிக்க கேட்டுக் கொள்ளப்படுகிறது.
8. உதவி ஆய்வாளர், காவல்துறை, நெல்லிக்கும்.
9. அலுவலக விளம்பரப் பலகைக்கு.
10. கோப்புக்கு.